**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 24.08.2023**
**--------------------------------------**

# <u>சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு</u>

**<u>கூட்டம் எண். 18</u>**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் ஆவணி 11 ஆம் நாள் 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28.08.2023ம் தேதியன்று திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**<u>பொருள் எண்.1</u>**

சாத்தூர் நகராட்சியில் UIDSSMT திட்டத்தின் கீழ் நகர்பகுதி முழுவதும் புதிய பாதாளச் சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு பாதாளச் சாக்கடை இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இணைப்புகள் வழங்கப்பட்டால் அதற்குரிய இணைப்பு கட்டணம் மற்றும் மாதந்திர கட்டணம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். மேலும் இத்திட்டத்திற்கு உபவிதிகள்,பொதுவிதிகள் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 மற்றும் திருத்திய விதிகள் 2023ன்படி வீட்டில் சாக்கடை இணைப்புகள் ஏற்படுத்தவும் மற்றும் கழிவுநீர் குழாய்கள் புதை சாக்கடைத் திட்டத்துடன் இணைப்புகள் கொடுப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் உபவிதிகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.253/2006/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.320, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.2</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெரிய ஜெட்ராய்டு வாகனம் TN67 BK 1057 தண்ணீர் ஒஸ் ஜெட்டிங் ஜாயின்ட் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியது மாற்றும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 16.08.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சாமுண்டீஸ்வரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் - ரூ.11210/-
2. A to Z என்டர்பிரைசைஸ் - ரூ.11800/-

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணியினை ரூ.12,000/-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.318 நாள்:31.07.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள சாமுண்டீஸ்வரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.570/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.321, நாள்: 28.08.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN67 BJ 4441-க்கு தகுதி சான்று 16.09.2023 அன்று முடிவடைவதால் மீண்டும் தகுதி சான்று பெறுவதற்கு கீழ்க்காணும் வேலைகள் பார்ப்பதற்கு உத்தேச செலவு தொகை ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. இன்ஜின் புல் ஆயில் சர்வீஸ்
2. 4 வீல் கீரிஸ் பேக்கிங்
3. வண்டி புல் பெயிண்ட் செய்ய வேண்டும்
4. வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்
5. FC, ஸ்டிக்கர், எலக்ட்ரிகல் வேலைகள்
   ஜெட்ராய்டு மிசின் வேலைகள் செய்ய வேண்டும்.
6. ஜெட்கிங் பம்பு சர்வீஸ் செய்ய வேண்டும்.
7. ஆயில் சர்வீஸ் செய்யயவும், ஜெட்ஒஸ் பிட்டிங் செய்ய வேண்டும்.
8. இன்ஜின் பில்ட்டர் ஆயில் பில்ட்டர் ஏர் பில்ட்டர் மாற்ற வேண்டும்.
9. ரேடியேட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
10. ஜெட் பிரசர் வால்வு மாற்ற வேண்டும்.
11. ஜெட் ஆன் ஆப் வால்வு புதியது மாற்ற வேண்டும்
12. வாட்டர் டேங்க் சுத்தம் செய்து பெயிண்டிங் செய்ய வேண்டும்.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.620/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.322, நாள்: 28.08.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.4</u>**

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோக பராமரிப்பு, குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன்கள் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.148/2023/எம்1 பகுதி-2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.323, நாள்: 28.08.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.5</u>**

சாத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள அடிபம்பு மற்றும் விசைபம்புகளை பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.6,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.147/2023/எம்1 பகுதி-2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.324, நாள்: 28.08.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.6</u>**

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி பாதாள சாக்கடைகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.,8,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.146/2023/எம்1 பகுதி-2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.325, நாள்: 28.08.2023**

**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7</u>**

சாத்தூர் நகராட்சிக்கு இருக்கண்குடி நீர் உந்து நிலையம் கிணறு - II -ல் உள்ள மோட்டார் அவ்வப்போது பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. எனவே மோட்டாருக்கு செல்லும் 95 Sq.mm Aluminium Cable பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக 120 மீட்டர் நீளத்திற்கு 16 Sq.mm Aluminium Cable வாங்கி பதிக்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,05,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.607/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.326, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.13 காட்டு தெருவில் குடிநீர் சரிவர கிடைக்கவில்லை என நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை நேரில் சென்று ஆய்வு செயப்பட்டதில் தண்ணீர் குழாய் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக குழாய் பதிப்பதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.40,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.631/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.327, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.8 மற்றும் 9 குருலிங்காபுரம் தெருவில் குடிநீர் சரிவர கிடைக்கவில்லை என நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை நேரில் சென்று ஆய்வு செயப்பட்டதில் தண்ணீர் குழாய் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக குழாய் பதிப்பதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.632/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.328, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.3 அண்ணாநகர் தெருவில் சிறுபாலம் பழுது ஏற்பட்டுள்ளது என நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் பாலம் முற்றிலும் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.636/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.329, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.3 சூடம் கம்பெனி தெருவில் சிறுபாலம் பழுது ஏற்பட்டுள்ளது என நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் பாலம் முற்றிலும் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.74,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.637/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.330, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.19 சுகாதார பணியாளர் காலணியில் உள்ள 12 குடியிருப்புக்கு பைப் லையன் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக பைப் லையன் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.635/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.331, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

சாத்தூர் நகராட்சியினால் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது. கட்டப்படும் கட்டிடத்தினை மண் பரிசோதனை மற்றும் வடிவமைப்பு வரைபடம் தயார் செய்யவும் அதற்கான செலவு தொகை ரூ.46,020/- மற்றும் கூலி மற்றும் வாடகை, சாப்பாடு செலவு உட்பட்ட ரூ.33,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.568/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.332, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.2 அண்ணாநகர் தெருவில் சிறுபாலம் பழுது ஏற்பட்டுள்ளது என நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் பாலம் முற்றிலும் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக சிறுபாலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,45,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.638/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.333, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட சிவன் கோவில் சன்னதி தெருவில் உள்ள அங்கன்வாடியில் புதியதாக குழந்தைகளுக்கான கழிப்பறை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.48,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.639/2023எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.334, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பெருமாள் கோவில் ரத வீதி தெருவில் உள்ள அங்கன்வாடியில் புதியதாக குழந்தைகளுக்கான கழிப்பறை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.48,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.640/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.335, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, விருதுநகர் மாவட்டம் மற்றும் இந்திய விலங்குகள் நல வாரிய பிரதிநிதி அவர்களின் கள ஆய்வு, நாள்:01.08.2023 மற்றும் விருதுநகர் மாவட்ட மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை அவர்களின் கடித ந.க.எண் 4045/C/2019 நாள்:02.08.2023 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண் 4989/2022/அ4 நாள்:11.08.2023ல் இந்நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்காக (Animal Birth Control) நகராட்சி உரக்கிடங்கு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மையத்திற்கு இந்திய விலங்கு நல வாரியத்தில் அங்கீகாரம் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்திய விலங்கு நல வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள **Online Application'ல்** கேட்கப்பட்டுள்ள விவரங்களை பதிவேற்றம் செய்வதற்கும் இதற்கான அங்கீகார கட்டணம் ரூ. 5000/-செலுத்துவதற்கும் மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அங்கீகார கட்டணம் ரூ.5000/-ஐ **Online'**ல் செலுத்தும் பொருட்டு மேற்படி தொகையை காசோலையாக சுகாதார ஆய்வாளர் பெயரில் வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்:340/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.336, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.18</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கட்டுப்பாட்டில் இயங்கி வரும் (1). வாகன எண் TN67 AH 6760 வாகனத்தின் பழுதை சரி செய்யும் பொருட்டு என்ட்ராடு செட், ஆப் லிவர் கேபிள், கிரிஸ் பெக் மாற்றிய வகைக்கும் இதற்கான கூலியும் சேர்த்து மொத்தம் ரூ.1650/-னை திரு.ஜெயக்குமார் ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கவும்,
(2). பொது சுகாதாரப்பிரிவு வாகன எண் TATA ACE-TN67 AJ 6058 வாகனத்தற்கு இன்ஜின் ஆயில் மாற்றம் மற்றும் இன்ஜின் டீசல் ஆயில் பில்டர் மாற்றம் செய்த சர்வீஸ் தொகை ரூ.1315/-னை திரு.ஜெயக்குமார் ஓட்டுநர் அவர்களுக்கு வழங்கவும்,
மேற்படி (1) மற்றும் (2)ல் குறிப்பிட்டுள்ள தொகையினை ஓட்டுநர் தன் செலவிலிருந்து செலவழித்துள்ளதால் அச்செலவுத் தொகையினை இதர செலவினத்திலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் திரு.ஜெயக்குமார் ஓட்டுநர் அவர்களுக்கு செலவுத் தொகை மொத்தம் (ரூ.1650+ ரூ.1315= ரூ.2965) னை வழங்க அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:187/2023/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.337, நாள்: 28.08.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**